Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

**வார பாடசாலை**

**வாரம் 01**

**பாடம்:- பொருளியல்**

**தயாரிப்பு:- திருமதி .F. றிஸ்லா BA (Hons)**
**இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்**

**தரம்:12**

தேர்ச்சி 4 :-சந்தையில் உற்பத்தி நிறுவனங்களின் தர்க்கரீதியான நடத்தைகளையும் உற்பத்தி காரணி சந்தையின் நடத்தையையும் கண்டு ஆய்வு செய்வர்.

தேர்ச்சி மட்டம் :-4. 6 உற்பத்தி காரணி சந்தையின் நடத்தையை விளக்குவார்.

# சந்தை

1. பொருட் சந்தை
2. காரணி சந்தை

பொருட் சந்தை:-

- நுகர்வு பொருட்கள் , சேவைகளின் பரிமாற்றம் தொடர்பில் கொள்வனவாளரும் , விற்பனையாளரும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளக் கூடிய எந்த ஒரு சந்தர்ப்பமும் பொருட்கள் சேவைகள் சந்தை எனப்படும்.
- உதாரணம்:- மீன் சந்தை, மரக்கறி சந்தை

காரணி சந்தை:-

- நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகிய உற்பத்தி காரணிகளின் பரிமாற்றம் தொடர்பில் கொள்வனவாளரும் , விற்பனையாளரும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளக் கூடிய எந்த ஒரு சந்தர்ப்பமும் காரணி சந்தை எனப்படும்.
- உதாரணம் :- ஊழிய சந்தை, மூலதன சந்தை

- உற்பத்தி காரணிகளுக்கு ஏற்படும் கேள்வியானது அக்காரணிகளை கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் சேவைகளின் ஊடாக ஏற்படுவதனால் வழிவந்த கேள்வி என அழைக்கப்படும்.

- காரணிகளின் விலைக்கும் (வாடகை, சம்பளம், வட்டி, லாபம்) அதன் நிரம்பல்தொகைக்கும் இடையே நேர் கணிய தொடர்பு காணப்படும்.
- ஊழிய கேள்வி கோடும், ஊழிய நிரம்பல் கோடும் வெட்டுகின்ற (சந்திக்கின்ற) புள்ளி ஊழிய சந்தை சமநிலை ஆகும்.

காரணி வருமானம் = காரணி விலை × காரணி அளவு

- காரணி வருமானத்தின் கூறுகள்
  1) மாற்றல் வருமானம்
  2) பொருளியல் வாடகை

<u>மாற்றல் வருமானம்</u> - உற்பத்திக் காரணி ஒன்று அதன் மாற்றம் பயன்பாடு காரணமாக உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபடுவதற்காக வழங்கப்படும் குறைந்தபட்ச கொடுப்பனவு மாற்றல் வருமானம் எனப்படும்.

<u>பொருளியல் வாடகை</u>- உற்பத்தி காரணிகள் அதன் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை (அருமை) காரணமாக பெற்றுக் கொள்கின்ற மேலதிக வருமானமே பொருளியல் வாடகை எனப்படும்.

**<u>பயிற்சிகள்</u>**

01.பொருள் சந்தை, காரணி சந்தை ஆகியவற்றை வேறுபடுத்துக?

02.மாற்றல் கட்டணம், சிக்கன வாடகை என்னும் பதங்களைவேறுபடுத்துக?

03.ஒரு உற்பத்தி காரணியானது எந்நிலைமைகளின் கீழ் ஒரு பொருளியல் வாடகையை உழைக்கலாம்?

04.ஊழியர் சந்தையின் சமநிலையை வரைபட உதவியுடன் விளக்குக?

05.ஊழியத்திற்கான கேள்வி மாறாத நிலையில் ஊழிய நிரம்பல் நெகிழ்ச்சியில் ஏற்படும் மாற்றம் காரணி உடைமையாளர் பெறும் சிக்கன வாடகை மற்றும் மாற்றல் கட்டணத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதை வரைபட உதவியுடன் விளக்குக?